பக்கங்கள்: 14 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 29 சனிக்கிழமை 14.11.2020 கதிர் 09

**இது ரகசியம் அல்ல!**

மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான சுதந்திர தேர்தல் ஆணைக் குழுவின் காலம் நேற்று முன் தினத்துடன் முடிவுக்கு வந்தது.

மூன்று தேர்தல் ஆணையர்களின் பதவிக் காலம் மட்டுமல்ல, சுயாதீன தேர்தல் ஆணையத்தின்

2



‘காலைக்கதிர்’ வாசகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# கொரோனாவுக்கு நேற்றும் ஐவர் பலி!

## மொத்தச் சாவு 53ஐ எட்டியது



**கொழும்பு, நவம்பர் 14 இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மேலும் ஐந்து பேர் நேற்று உயிரிழந்துள்ளனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2

## மேல்மாகாணத்தின் பயணத் தடை நீடிக்கும் சாத்தியம் இல்லையாம்!

மேல்மாகாணத்தில் நடைமுறையில் உள்ள பயணத்தடையை நீடிக்கும் எண்ணம் இல்லை என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில்

2



## பைடனின் முக்கிய பதவியில் புலி ஆதரவாளர் நியமனமாம்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பைடனின் மாற்றங்களுக்கான சபைக்கு ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சுசன் ரைஸ் நியமிக்கப்பட உள்ளார்.

இவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானர் எனவும், தமிழ் மக்களுக்கு

2

## கொரோனாத் தொற்றுப் பரவலால் சிறையிலுள்ள 3 எம்.பிக்களையும் சபைக்கு அழைக்காதிருக்க முடிவு

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவி வருகின்ற நிலையில், சிறைச்சாலைகளிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை, சபை அமர்வுகளுக்கு அழைக்காமல் இருக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்பான செயலணியால் இதற்கான தீர்மானம் நேற்று எடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின்

2

## இந்துக்களின் தீபத் திருநாள் அறிவொளி பரப்பும் வழிபாடு!

### விதந்து போற்றுகின்றார் ஜனாதிபதி



அஞ்ஞான இருளகற்ற - தீபங்கள் ஏற்றி அறிவொளி பரப்புவதே இந்துக்களின் தீபாவளி வழிபாடு; எமது வாழ்த்துக்கள்.

- இவ்வாறு தமது தீபாவளிச் செய்தியில் தெரிவித்திருக்கின்றார்

2

## ரிஷாத்தின் பிணை மனு மீள நேற்று நிராகரிப்பு!

### 25 வரை விளக்கமறியல் நீடிப்பு

பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் எம்.பி. சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு, கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில்

2



## வேறுபாடுகளைக்களையும் தருணமாக தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம்!

### வாழ்த்துச் செய்தியில் பிரதமர் தெரிவிப்பு

"நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்து வைத்திருந்த எல்லா வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம்.

- இவ்வாறு தீபாவளித் திருநாளை ஒட்டி தாம் விடுத்த செய்தியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இருளை அகற்றி ஒளி ஏற்றும் இந்து மக்களின் உயர்ந்த சமயப் பண்டிகைத் தினமான

2

காலைக்கதிர் Kalaikkathir செம்மண் N27 News

வாசகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள்

அனைவருக்கும் எமது இனிய தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

Green Media House Pvt Ltd | பசுமை ஊடக இல்லம்

பணிப்பாளர், பணியாளர்கள்

## இனி இது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காலமும் கூட என்றே குறிப்பிடத் தோன்றுகின்றது.

ஏன் என்றால் புதிதாக அமைக்கப்படவிருக்கும் தேர்தல் ஆணையம் தொடர்பில் வெளியாகும் முதல் தகவல்கள், அது சுயாதீன - சுதந்திர - தேர்தல் ஆணையமாகச் செயற்படுமா என்ற சந்தேகத்தையே தந்து நிற்கின்றன.

சரியோ, பிழையோ மஹிந்த தேசப்பிரியவைத் தலைவராகவும் ரட்ணஜீவன் கூல் உட்பட மற்றைய இருவரை ஆணையாளராகவும் கொண்டு கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்கிய சுதந்திர தேர்தல் ஆணையம் குறிப்பிடத்தக்க அளவுக்கு சுயாதீனமாக இயங்கியது எனலாம்.

அரசமைப்பிற்குக் கொண்டு வரப்பட்ட இருபதாவது திருத்தம் மூலம் சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு உட்பட பல ஆணைக்குழுக்களின் தனித்துவ அதிகாரம் அடிபட்டுப்போய்விட்டது. அந்த ஆணைக்குழுக்கள் இனிமேல் ஜனாதிபதியின் எடுப்பார் கைப்பிள்ளைதான்.

அந்த வரிசையில் இருபதாவது திருத்தம் வந்த பின்னர் சுயாதீனம் இழந்த நிலையில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் முதலாவது ஆணைக்குழு அதுதான். தேர்தல் ஆணையம்தான்.

புதிய தேர்தல் ஆணையத்தின் தலைவராகப் பெரும்பாலும் பிரபல சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா நியமிக்கப்படலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது அவரால் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுப் பணி புரிந்தவரே அவர்.

பின்னர் சொற்ப காலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சிரேஷ்ட ஆலோசகராகப் பணிபுரிந்தார்.

அது மட்டுமல்ல, நல்லாட்சி அரசின் காலத்தில் கோட்டபாய ராஜபக்ஷவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில் அவருக்காக முன்னிலையானவர் இந்த புஞ்சிஹேவா.

அதற்காக, அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாகத்தான் விடயங்களைக் கையாளுவார் என்று நான் கூற முற்படவில்லை.

இப்படித்தான் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜே.ஆர். ஜெயவர்த்தனா, அதுவரைத் தமக்காக வழக்குகளில் முன்னிலையாகி வாதிட்ட சிரேஷ்ட சட்டத்தரணி நெவில் சமரக்கோனைப் பிரதம நீதியரசராக நியமித்தார்.

ஆனால் பதவியேற்ற கணத்தில் இருந்து ஒரு நீதியரசருக்குரிய தனித்துவச் சிறப்பை வெளிப்படுத்தி வரலாறு படைத்தார் நெவில் சமரக்கோன்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால் கூட தமது பழைய சட்டத்தரணியான பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனை நெருங்க முடியவில்லை.

தனது தனித்துவமான, முன்மாதிரியான, பக்கச் சார்பற்ற, நடுநிலையான செயற்பாடுகள், பண்பியல்புகள் மூலம் பிரதம நீதியரசர் என்ற பதவிக்கே அணி சேர்த்தார் நெவில் சமரக்கோன்.

ஆனால் எல்லோரும் நெவில் சமரக்கோன் ஆகிவிடமுடியாது. தேர்தல் ஆணையாளராக வரப்போகின்றவர் எனக் கூறப்படும் நிமால் புஞ்சிஹேவ குறைந்தபட்சம் ஒரு மஹிந்த தேசப்பிரியவாக உருவெடுத்தால் நல்லது. பார்ப்போம் என்ன நடக்கப்போகின்றது என்பதை...!

★ ★ ★

விலைக்கட்டுப்பாடுகள் தொடர்பான அரசின் அறிவிப்புகள், தேர்தல் வாக்குறுதிகள் போல காற்றில் பறக்கின்றமை நகைப்புக்கிடமாகியிருக்கின்றது.

தேங்காய்க்குக் கட்டுப்பாட்டு விலை என்றார்கள். தேங்காய் காணாமல் போனதுதான் மிச்சம்.

கடந்த வாரம் அரிசிக்கு நிர்ணய விலை வர்த்தமானி மூலம் அறிவித்தனர். 92ரூபா என்றார்கள். ஆனால் சந்தையில் 130 ரூபா - 140 ரூபாவுக்குக் குறையவில்லை.

சீனிக்கு இறக்குமதி வரியை நீக்கி விட்டோம், சீனியை கிலோ 85 ரூபாவுக்கு விற்கலாம் என்றனர்.

விலை குறையவில்லை. கிலோ 130 ரூபாவுக்கே விற்பனையானது.

அப்படி விற்றால், ஏன் பார்த்திருக்கின்றீர்கள் என்று விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் கேட்டோம்.

சீனிக்கு வரி விலக்கு என்ற அரசின் அறிவிப்பை மட்டும் வைத்து கிலோ ரூ.130 படி விற்பவர்களைப் பிடிக்கவோ, சட்ட நடவடிக்கை எடுக்கவோ முடியாது என்றார்கள் அவர்கள். அதற்கான விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டுமென்றனர் அப்போது.

இப்போது வர்த்தமானி அறிவித்தலும் வந்து பல நாள்கள் கடந்து விட்டன. சீனியின் விலை சந்தையில் இறங்கவுமில்லை, விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவுமில்லை.

ஏன் என்று விளங்கவில்லை. இவை பற்றி அதிகம் எழுதப் போனால் என் வர்த்தக நண்பர்கள் மூஞ்சையைத் தூக்கி வைத்துக் கொண்டு என்னுடன் தகராறு பண்ணுவார்கள். அதனால், எழுத்தை அமுக்கி வாசித்து இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

திருடனாயப் பார்த்துத் திருந்தாதவரை திருட்டை ஒழிக்க முடியாது என்பார்கள். திருந்தாதவர்கள் குறித்து நான் அதிகம் எழுதி விணாகப் பகைவர்களைச் கூட்டிக்கொள்வதுதான் மிச்சம்.

அதனால், அடக்கி வாசிப்பதே மேல் என்று கருதி அடங்கி விடுகிறேன்.

–மின்னல்–

## மேல் மாகாணத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மேல்மாகாணத்தில் இருந்து வெளியேறுவதற்கு 15 ஆம் திகதி நள்ளிரவுவரை தடைவிதிக்கப்பட்டுள்ளது. அக்காலப்பகுதி முடிவடைந்த பின்னரும் தடையை நீடிக்கும் திட்டம் இல்லை. எனினும், அடுத்த 48 மணிநேரத்தில் வரும் முடிவுகளின் அடிப்படையிலேயே தீர்மானம் எடுக்கப்படும்.

"தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் இல்லாத பகுதிகளை விடுவிப்பது தொடர்பில் நாளை (இன்று) கலந்துரையாடப்படவுள்ளது. - என்றார் இராணுவத் தளபதி.

## இந்துக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

உலகெங்கிலும் வாழும் இந்துக்கள், தீபாவளி பண்டிகை தினமான இன்று அஞ்ஞான இருளகற்றி அறிவொளி பரப்பும் எதிர்பார்ப்புடன் தீபங்கள் ஏற்றி வழிபாடுகளில் ஈடுபடுவர்.

தீபத் திருநாள் தீபாவளி பண்டிகையானது அனைத்து உள்ளங்களிலும் இருள் நீங்குவதுடன், தாம் ஒளிபெற்று நல்வாழ்வு வாழ்வதற்கான பிரார்த்தனையுடன், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைப் பரிமாறி - அன்பையும் மகிழ்ச்சியையும் அவர்கள் தமக்குள் பகிர்ந்துகொள்ளும் கலாசார விழா என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

அந்த வகையில் - இன மற்றும் சமய நல்லிணக்கத்தையும் பரஸ்பர புரிந்துணர்வையும் மனிதர்களிடையே மேம்படுத்துவதற்கு - இத்தகைய இறை நம்பிக்கை சார் விழாக்கள் பெரிதும் உதவும் என்பது எனது நம்பிக்கையாகும்.

முழு உலகமும் கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக பல்வேறு பாரிய பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்துள்ள இச்சந்தர்ப்பத்தில் - வழிபாட்டுக் கிரியைகளில் ஈடுபடுவது மனித உள்ளங்களுக்கு அமைதியை தருகின்றது.

இந்த தீபத் திருநாளில், அந்த அமைதிக்காக, எமது நாட்டிலும் உலகெங்கிலும் வாழும் அனைத்து இந்துக்களும் ஒருமனதாக - கடவுளுக்காக - அர்ப்பணிப்புகளைச் செய்வர் என்பது எனது நம்பிக்கையாகும்.

அது சிறந்ததோர் சமூகத்தையும் ஆரோக்கியமான வாழ்வையும் கட்டியெழுப்பும் எமது நோக்கத்திற்கும் ஆசீர்வாதமாக அமையும் என்றே நான் எண்ணுகின்றேன்.

இந்தத் தீபத் திருநாள் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும், அவர்கள் எதிர்பார்க்கும் உள அமைதி

# போலிச் செய்தி வெளியிட்டால் கட்டாயம் கம்பி எண்ணுவீர்கள்!

## பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

சமூகவலைத்தளங்களில் போலிச் செய்திகளை வெளியிடும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கத்தோலிக்க மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் போலிச் செய்திகள் சமூக வலைத்தலங்களில் வெளியிடப்படுகின்றன. இவ்வாறான செய்திகள் நாட்டு மக்கள் மத்தியில் இன மற்றும் மத பேதங்களை தோற்றுவிப்பவையாகக் காணப்படுகின்றன.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக யாசகர் ஒருவரே வீதியில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தார். எனினும், இவ்வாறு மேலும் பலர் வைரஸ் காரணமாக உயிரிழந்த நிலையில் அவர்களது சடலங்கள் வீதியோரங்களில் இருந்து மீட்கப்பட்டன எனச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. இது தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. - என்றார் அவர்.

## சிறையிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஆகியோர் தொடர்பில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் சிறைச்சாலைகளிலிருந்தே கடந்த நாடாளுமன்ற அமர்வுகளுக்கு வந்து சென்றனர்.

ஆனால், இனிவரும் அமர்வுகளுக்கு அவர்களை அழைக்காது இருக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும், நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம், சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக அவர்களை அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## வேறுபாடுகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை விடுப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இருட்டுவழியிற் தீபம் இருந்தால் அதுவே வழிக்குத் துணையாக அமையும். மனித வாழ்க்கைப் பாதைக்கு அருட்தீபம் துணை நின்றால் வாழ்வு சுபீட்சமாகும். அத்தகைய அருட் தீபமாகிய ஆன்மீக ஞான ஒளியை இறைவழிபாடு மூலம் பெறும் சிறப்பு வாய்ந்த நன்னாளே தீபாவளித் திருநாள். தேசிய ஒற்றுமைக்கு இது ஒரு சிறந்த நாளாகும். எல்லா மதங்களிலும் விளக்கு ஏற்றுவதன் காரணம் இருளையும் அறியாமையையும் அகற்றி ஒளியை பரப்புவதற்கே. தீபாவளியும் அதன் எதிர்பார்ப்புகள் நிறைந்த தீப ஒளியும் சமூகங்களுக்கு மத்தியிற் சிறந்த புரிந்துணர்வுக்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்து வைத்திருந்த எல்லா வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம். இந்த ஒளியை நாம் அணைய விடாமல் பாதுகாத்து மறுபடியும் இருளுக்குள் மூழ்காமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்

இன்று நம் தேசம் 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' எனும் அரசாங்கத்தின் தேசிய கொள்கைக்கு அமைவாக ஒளிநிறைந்த வளர்ச்சிப் பாதையிற் பயணிக்க ஆரம்பித்திருக்கிறது. அனைத்துத் துறைகளிலும் நாம் முன்னேற்றம் காண முயல்கின்றோம். இன்று உலகையே அச்சுறுத்திவரும் கொவிட்-19 நோய்த் தொற்றிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாக்கும் பணியினை அரசாங்கம் மக்கள் அனைவரதும் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றது. கொவிட்-19 நோய்த்தொற்றிருந்து இலங்கைத் திருநாடு விரைவில் மீள்வதற்கும் எம் மக்களுக்கு எல்லா சுபீட்சங்களையும் தரும் நல்லதோர் எதிர்காலத்தின் ஆரம்ப நாளாக இத்தீபாவளித் திருநாள் அமையட்டும்.

இலங்கைவாழ் இந்து மக்கள் அனைவருக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

## கொரோனாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்த நிலையில் இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு - 14 பகுதியைச் சேர்ந்த 83 வயது பெண் ஒருவர், சிலாபம் பகுதியைச் சேர்ந்த 68 வயது ஆண் ஒருவர், இரத்மலானை பகுதியை சேர்ந்த 69 வயது ஆண் ஒருவர், கொழும்பு - 13 பகுதியைச் சேர்ந்த 78 வயது மற்றும் 64 வயது ஆண்கள் இருவர் என ஐவரே நேற்று கொரோனாவுக்குப் பலியானவர்களாவர்.

## பைடனின் முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எதிராக சிங்கள பேரினவாத படையினர் முன்னெடுத்த இனப்படுகொலை போரை நிறுத்த முயற்சித்தவர் எனவும், இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் யோசனையை கொண்டு திட்டமிட்டவர் எனவும் சிங்கள இணையத்தளம் ஒன்று கூறியுள்ளது.

சுசன் ரைஸ் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் எதிர்வரும் 2021 ஜனவரி 20 ஆம் திகதி பதவியேற்க உள்ளார்.

இதனையடுத்து சுசன் ரைஸ் குறித்த மாற்றங்களுக்கான சபைக்கு நியமிக்கப்பட உள்ளார் எனவும் அந்த சிங்கள இணையத்தளம் கூறியுள்ளது.

அமெரிக்காவின் புதிய அதிபராக ஜோ பைடன் பதவியேற்றதும் இந்த நியமனங்கள் உடன் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இடம்பெற்ற இனப்படுகொலை குற்றங்கள் பற்றிய உண்மைகளைக் கண்டறிவதற்காக விசாரணைக் குழுக்களையும், பொறிமுறைகளையும் உருவாக்குவதற்கு அமெரிக்கா ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளதாக, முன்னாள் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் முன்னர் அழுத்தமாக ஒபாமாவின் பதவிக் காலத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் முன்னர் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரிஷாத்தின் பிணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிட்டுள்ளது.

2019இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது அரச நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தி பஸ்கள் மூலம் புத்தளத்தில் இருந்து மன்னாருக்கு வாக்காளர்களை அழைத்துச் சென்றார் என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ரிஷாத் பதியுதீன் ஒக்டோபர் 19 ஆம் திகதி தெஹிவளை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தன்னைப் பிணையில் விடுதலை செய்யுமாறு ஒக்டோபர் 27 ஆம் திகதி மனுவொன்றை ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்திருந்த நிலையில் அந்த மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று நேற்றும் அவரால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டதுடன் அந்த மனுவும் நீதிமன்றத்தால் நிராகரிக்

# கோப்பாய் கொரோனா நோயாளருக்கு யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை

## வைத்தியர்கள், ஊழியர்கள் கடும் சீற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , நவ.14

**கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் இயங்கும் கொரோனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த கொரோனா நோயாளி ஒருவருக்கு திடீர் சுகயீனப் பாதிப்பு ஏற்பட்ட தனால், எந்தவித மான பாதுகாப்பு முன்னேற்பாடுகளுமின்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு அவரைக் கொண்டு வந்து அனுமதித்து, சிகிச்சை அளிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், ஊழியர்கள் கடும் சீற்றத் திற்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிகின்றது.**

கொரோனாவுக்கு கோப்பாயில் சிகிச்சை பெறும் நோயாளியை சாதாரண நோயாளர்கள் போன்று எந்த வொரு பாதுகாப்பும் இன்றி போதனா வைத்தியசாலை யில் அனுமதித்து சிகிச்சையின் பின்பு மீண்டும் கொரோனா வைத்தியசாலைக்கே திருப்பி அனுப்பியமை குறித்து வைத்தியர்களும், தாதியர்களும் அதற்கு நிர்வாகத்தின் தவறுதான் காரணம் எனக் குற்றம்சாட் டுகின்றனர்.

இது தொடர்பில் போதனா வைத்தியசாலைப் பணிப் பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

“எந்த நோயாளியும் வைத்தியசாலையில் அனும திக்கப்படுகின்றனர். ஆனால் கொரோனா நோயாளர் எனில் அதற்கான தனியான விடுதி வசதி உண்டு” – எனப் பதிலளித்தார்.

இவ்வாறு மாறுபட்ட கருத்து வருவது தொடர்பில் அரச மருத்துவ சங்கத்தின் யாழ்ப் பாணத்தைப் பிரதி நிதித்துவம் செய்யும் மருத் துவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

கொரோனா வைத்தியசாலை ஒன்றை ஏற்படுத்தி னால் அங்கே அனுமதிக்கப்படும் கொரோனா நோயாளர் களிற்கு பிற நோய் ஏதாவது ஏற்படுமாயின் அவற்றை எதிர்கொள்வதற்கான பின்னூட்டல் ஏற்பாட்டினையும் சம நேரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய், மருதங்கேணியில் இரு கொரோனா வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அங்கே அனுமதிக்கப்பட்ட கொரோனா நோயாளிக்கு மூச்சுத் திணறலோ அல்லது குருதி அழுத்தம், சிறு நீரக நோய் ஏதாவது ஏற்பட்டால் சிகிச்சை அளிப்பதற்கான பின்னூட்டல் ஏற்பாட்டைச் செய்யா தமை முறையாகத் திட்டமிடப்படாத தவறு. இதுதான் யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் அனு மதிக்கப்பட்டிருந்த கொரோனா நோயாளிக்கும் ஏற்பட்டது. அவருக்குத் தனியான இடத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டதாகக் கூறப்படுவது தவறு. அவசர சிகிச் சைப் பிரிவிலேயே அவரை அனுமதித்த வைத்தியர்கள், தாதியர்கள் மிக சிரமத்தின் மத்தியில் சிகிச்சை அளித் துள்ளனர். இது முழுக்க முழுக்க தவறான ஒரு செயல் பாடு. – என்றார்.

## கொரோனா குணமடைவு 11 ஆயிரத்தைக் கடந்தது!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 378 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள் ளனர்.

சுகாதார அமைச்சு நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய, கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் 11 ஆயிரத்து 31 பேர் இதுவரை பூரணமாக குணமடைந்துள் ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயி ரத்து 191 ஆகக் காணப்படு கின்றது.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 107 பேர் தொடர்ந் தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் 48 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## இலங்கையில் நேற்று மாத்திரம் 468 பேருக்குக் கொரோனா உறுதி

இலங்கையில் நேற்றும் 468 பேருக்குக் கொரோனா வைரஸ் உறுதியாகியுள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோ னாவின் மூன்றாவது அலை யில் மட்டும் சிக்கிப் பாதிப்ப டைந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 717 ஆக உயர்ந் துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக் கப்பட்டவர்களின் மொத்த எண் ணிக்கை 16 ஆயிரத்து 191 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 5 ஆயி ரத்து 107 பேர் வைத்தியசாலைக ளில் சிகிச்சை பெற்று வருகின்ற னர். 11 ஆயிரத்து 31 பேர் குணம டைந்து வீடு திரும்பியுள்ளனர். 53 பேர் உயிரிழந்துள்ளனர்.

## கொழும்பு போன்று தோட்டப் பகுதிகளிலும் கொரோனாக் கொத்தணியாக உருவாகலாம்!

### எச்சரிக்கின்றார் திகாம்பரம் எம்.பி.



கொழும்பு, கம்பஹா போன்று தோட்ட பகுதி களிலும் கொரோனா தொற்று பரவும் அச்சுறுத் தல் இருந்து வருகின்றது. அதனால் மக்களைப் பாதுகாக்கத் தேவையான சுகாதார ஏற்பாடுகளை இந்த பகுதிகளில் அரசாங்கம் விரைவாக மேற் கொள்ளவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ப. திகாம்பரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கொவிட் காரணமாக நாட்டின் நிகழ் கால நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

கொரோனா தொற்றின் அச்சுறுத்தல் தொடர் பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னெச்சரிக்கை விடுத்தபோதும் அரசாங்கம் சிறிதளவும் இதனைக் கண்டுகொள்ளவில்லை. இதன் விளைவையே நாடு தற்பொழுது எதிர் கொண்டுள்ளது. நாம் முன்னெச்சரிக்கை செய்த போதே விமான நிலையத்தை மூடியிருந்தால் பரவலைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

எனினும் அரசாங்கம் தான்தோன்றித் தன மாகச் செயற்பட்டதாலும் அசமந்தப் போக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தமையாலும் தற்பொழுது 25 மாவட்டங்களிலும் வைரஸ் பரவியுள்ளது.

கொழும்பு, கம்பஹா போன்று கொரோனா வேகமாகப் பரவும் அச்சுறுத்தல் காணப்படும் பகுதியாக பெருந்தோட்டப் பகுதிகள் காணப்படு கின்றன. இங்குள்ள மக்கள் லயன்களில் நெருக் கமாக வாழ்கின்றனர். இங்கு கொத்தணியாக தொற்றுக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. இதிலிருந்து அம்மக்களைப் பாதுகாக்க பி.சி. ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் மக்களை தனிமைப்படுத்தி வைப்பதற்கான மையங்களை அமைப்பதற்கும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கக் கூடிய வசதி களுடன் வைத்தியசாலைகளை தயார்ப்படுத்து வதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண் டும்.

### கொரோனா வைரஸ் தொற்றால்

## வீதியில் விழுந்து சாகும் மக்கள்: உண்மைக்குப் புறம்பான செய்தி

### சுகாதார அமைச்சு மறுப்பு

கொரோனா வைரஸ் தொற்றால் மக்கள் வீதியில் இறந்து கிடக்கின்றார்கள் என்று சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் செய்தி கள் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

– இவ்வாறு சுகாதார அமைச்சின் பேச்சா ளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரி வித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:–

கொரோனாவால் மக்கள் வீதியில் விழுந்து

தாக சமூக வலைத்தளங்களில் சில கருத் துக்கள் பகிரப்படுகின்றன. நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றால்தான் உயிரிழக்கின் றார்களா என்பது பரிசோதனைகளின் மூலமே உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இதய நோய் அல்லது வேறு ஏதேனும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் கூட வீதி யில் சென்று கொண்டிருக்கும்போது எதிர் பாராத விதமாக உயிரிழக்கக் கூடும். இவ்வாறு உயிரிழப்பவர்களின் பிரேத பரிசோதனைகள் நிறைவடையும் வரை கொரோனாத் தொற்று என்று கூற முடியாது.

ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் இனங்காணப்படுவது அபா யமான நிலைமையாகும். இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமா

## உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்க சிறை அதிகாரிகளுக்குப் பணிப்பு!

கொழும்பு சிறைச்சாலை அதி காரிகளை எதிர்வரும் இரண்டு வாரங் களுக்கு தமது உத்தியோக பூர்வ இல்லங்களிலேயே தங்கியிருக்கு மாறு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷிர உபுல் தெனிய தெரி வித்துள்ளார்.

இதன்படி வெலிக்கடை கொழும்பு சிறைச்சாலை மற்றும் மெகசின் சிறைச்சாலை ஆகியவற்றில் பணி யாற்றும் எந்தவோர் அதிகாரியும் சிறைச் சாலையில் இருந்து வெளியே றுவதற்கு அனுமதிக்கப்பட மாட் டார்கள்எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கண்டி போகம் பரை சிறைச்சாலையின் கூரை மீது ஏறி வியாழன் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்ட கைதிகளை வேறு சிறைச்சாலை களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

குறித்த சிறைச்சாலையின் கைதி கள் 800 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட் டுள்ளமையுடன் 30 கைதிகள் மற் றும் சிறைச்சாலை அதிகாரிகள் இருவருக்கு தொற்று உறுதிப்படுத் தப்பட் டுள்ளது. எனவே விரைவில் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்குமாறு கோரி கைதிகள் சிலர் வியாழன் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

இதேவேளை, இதுவரை யான காலப்பகுதியில் கண்டி – போகம் பரை சிறைச்சாலை கைதிகள் 450 பேருக்கு பி.சி. ஆர். பரிசோதனை கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என சிறைச் சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷிர உபுல்தெனிய மேலும் தெரிவித்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## நமக்கு மீட்சி எப்போது?

இன்று தீபாவளித் திருநாள்.

இது இந்துக்களின் முக்கிய பண்டிகைத் தினம். ஆனால் இம்முறை அதனைப் பண்டிகையாகக் கொண்டாடும் மனநிலையில் மாநில மாந்தர்கள் இல்லை.

கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய வைரஸ் உலக மானுட சமுதாயத்தையே முடக்கி, அடக்கி நிற்கும் அவலம் இன்று கண்ணுக்கு முன்னால் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

அண்டத்தின் எல்லைகளைத் தொட்ட மனிதன், அணுவையும் பிளந்து ஆதிக்கம் படைத்த மானுடன், இன்று கண்ணுக்குத் தெரியாத வைரஸுடன் மல்லுக்கட்ட முடியாமல் துவண்டு, பின்வாங்கி, ஒளிந்தோடும் அவல நிலைமை.

இந்தப் பேரச்ச நிலையில் இருந்து மானுடன் மீளும் நிலைமைக்கு ஒரு தூண்டுதல் தரும் குறியீட்டுப் பண்டிகையே தீபத் திருநாள்.

தீபாவளியைத் தீபத் திருநாள் என்கின்றனர் நம் முன்னோர்கள். தீமை அகன்று நன்மை பிறக்கும் நன்னாள் என்றும் அதை அடையாளப்படுத்துவர்.

ஒளி என்பது வெற்றியின் குறியீடு. இருள் என்பது தோல்வியின் அடையாளம்.

தீமையின் வடிவமான நரகாசுரன் அளவற்ற வரம்பெற்று பூவுலகுக்கு எல்லையற்ற தொல்லை தந்தான். அவனை மகா விஷ்ணு தந்திரம் செய்து வதம் செய்தார். அதைக் கொண்டாடுவதே தீபத் திருநாள் என்பது நமது ஐதீகம்.

இப்போதும் தீமையின் வடிவமாக முழு உலகையுமே நரகாசுரன் போல ஆட்டிப் படைகின்றது கொரோனா எனும் பேரசுரன்.

நரகாசுரன் போல கொரோனா வைரஸ் அளவற்ற வலிமை பெற்று நிற்கின்றது. அழித்துவிட முடியாது பரவுகின்றது. உடலுக்குள் புகுந்து மனிதர்களை ஆட்டிப் படைக்கின்றது. கண்ணுக்கும் தெரியாமல், தேகத்துக்குள் ஊடுருவி, சாவுகளை அதிகரிக்கின்றது.

ஆறறிவு மனிதனின் தந்திர மூளைக்குள் அடங்காது, தன் பரவலினால் மனிதத்தை விஞ்சி நிற்கின்றது அது.

அந்த வைரஸின் தொற்றுக்கு அஞ்சி, ஓடி, ஒளிந்து, ஒதுங்குபவரையும் கூட அது தேடிச் சென்று தொற்றிக் கொள்கின்றது. தோற்கடித்துக் கொல்லவும் செய்கின்றது.

மனிதர் தம் மூளைகளைப் போட்டுக் குடைந்து கண்டு பிடித்த மருந்துகள் கூட இன்னும் முழுதாக வெற்றி நடை போடவில்லை.

தீபத் திருநாளின் கருப்பொருள் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதுதான்.

ஆனால், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் எதிர்கொள்ளும் அதர்மமே என்றும் வெற்றி கொள்ளும் நிலையில் இருக்கின்றமையையும், தர்மம் எப்போதும் அவர்களுக்கு எட்டாக் கனியாகத் தள்ளி நிற்கின்றமையையும் நாம் காண்கின்றோம்.

பேரவல யுத்தத்துக்கு முன்னரும் சரி, யுத்த காலத்திலும் சரி, யுத்தத்துக்குப் பின்னரும் சரி, பல தீபாவளிகள் வந்து அவர்களைக் கடந்த போய்விட்டன.

இலவு காத்த கிளிபோல நம்பிக்கையுடன் இந்தத் தீபாவளிக்குள் தீர்வு, அடுத்த தீபாவளிக்கு முன் தீர்வு என்று எதிர்பார்த்துக் காத்திருந்து, ஏங்கி, ஏமாறியமை மட்டுமே அவர்களுக்கு மிச்சம்.

இந்தப் பின்னடைவுக்கு மத்தியில் உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் கொரோனாப் பேரரக்கன் இம்முறை தமிழர் வாழ்வியலிலும் புகுந்து விளையாடுகின்றான்.

இலங்கையில் மட்டுமல்ல, புலம்பெயர் தேசங்களிலும் எங்களின் தமிழ் இரத்த உறவுகளை வாட்டி வதைத்து, பிழிந்தெடுத்து, கொன்று குவிக்கின்றது கொரோனா.

அளவற்ற சக்தியோடும், தந்திரமான தகைமையோடும் மனித வாழ்வில் புகுந்து விளையாடும் கொரோனா என்ற நரகாசுரனை – பேரரக்கனை – அடக்கி, ஒடுக்கி, அழித்து, இந்த மானுட மாந்தர்களை நிரந்தரமாகக் காப்பதற்கு யார் மகா விஷ்ணுவாக, எந்த வடிவத்தில் வரப் போகின்றார்கள்?

கொரோனா வைரஸ் என்ற இந்த நுண்ணுயிருக்கு முன்னால், உலக வல்லரசுகளும், மானிட வல்லாதிக்கமும் சுருண்டு, முழந்தாளிட்டு, மண்டியிட்டு மடங்கிக் கிடக்கின்றது என்பது மட்டும் உண்மை.

அதனால் தீபத் திருநாளை கூட வீட்டுக்குள் முடங்கிக் கொண்டாடும் சோக நிலைமை மானிடருக்கு.

இந்த நரகாசுரனை அளிப்பதற்கு மகா விஷ்ணு எந்த மருந்தின் வடிவத்தில் அவதாரம் எடுக்கப்போகின்றார்? இனி வரவேண்டிய கல்கி அவதாரம் அதுதானோ...?

கடவுளுக்குத்தான் அது தெரியும்.

எது, எப்படி என்றாலும், இந்தப் பேரரக்கனிடமிருந்து மானுடனை மீட்க ஓர் அவதாரம் நிச்சயம் வரும் என்று நம்பிக்கை கொள்வோம். அதுவரை கொரோனாவுடன் துவந்த யுத்தம் செய்தபடி அந்த மீட்புக்காகக் காத்திருப்போம்.

## சுழிபுரம் மோதலில் ஒருவர் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

சுழிபுரம் பகுதியில் நேற்று இரவு இரு குழுக்கள் இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளமையோடு இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இரு குழுக்களிடையிலான வாய்த்தர்க்கம் மோதலாக உருவெடுத்துள்ளது. இந்த மோதல் ஒரு கட்டத்தில் வாள் வெட்டாக மாறியுள்ளது. இதன் காரணமாக ஒருவர் உயிரிழந்தமையோடு மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அப்பகுதியில் வட்டுக்கோட்டை பொலிஸார் இரவு முழுவதும் காவல் பணியில் ஈடுபட்டுள்ளனர். இச் செய்தி அச்சுக்கு போகும் வரையில் மேலதிக செய்திகளை பெற முடியவில்லை.

## பொருளாதாரம் வீழ்ச்சி ஏற்படாத வகையில் கொரோனாவைக் கட்டுப்படுத்துகின்றோம்!

### சுகாதார அமைச்சர் பவித்திரா தெரிவிப்பு



கொழும்பு, நவ.14

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி காணாத விதத்தில் கொவிட் -19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சபையில் தெரிவித்தார்.

கொவிட் – 19 வைரஸ் பரவல் நிலைமையில் நாட்டின் தற்போதைய நடைமுறைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியினர் கொண்டு வந்திருந்த நிலையில் விவாதத்தில் உரையாற்றிய போதே சுகாதார அமைச்சர் இதனைக் கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

கொவிட் – 19 வைரஸ் பரவல் சமூகப் பரவலாகக் காணப் படவில்லை. வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளோம்.

இன்று நாட்டில் பரவலாக வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை, பேலியகொடை கொத்தணியில் இருந்தே நோயாளர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர். எனவே, வைரஸ் சமூக பரவலாக மாறும் நிலைமையை நாம் கட்டுப்படுத்தியுள்ளோம். இதில் சகலரும் ஒன்றிணைந்து நாடாக மீள்வோம், இதற்கு சகலரதும் ஒத் துழைப்புகள் அவசியம்.– என்றார்.

## 20 இற்கு ஆதரவளித்த 8 பேரையும் ஆளும் தரப்பில் அமரவையுங்கள்!

### சபையில் கிரியெல்ல கோரிக்கை

அரசு கொண்டுவந்த 20ஆவது திருத்த சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 8 பேரவையும் ஆளும் தரப்புடன் இணைத்து விடுமாறும், எதிர்க்கட்சியில் அவர்களை வைத்திருந்தால் பாரிய பிரச்சினைகள் உருவாகும் எனவும் எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நாட்டின் கொரோனா வைரஸ் நிலைமைகள் குறித்து எதிர்க்கட்சி கொண்டுவந்த விவாதம் முடிந்த பினனர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் கூறிய தாவது:-

அரசு கொண்டுவந்த 20 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 8 பேரையும் எதிர்க்கட்சியுடன் அமர வைக்க வேண்டாம் எனக் கடிதம் மூலம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளேன்.

எனவே, நீங்கள் அதனைக் கருத்தில் கொண்டு அவர்கள் 8 பேரையும் ஆளும்



தரப்பின் பக்கம் ஆசனங்களை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். எதிர்வரும் 17ஆம் திகதி வரவு – செலவுத் திட்ட விவாதங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இது மிகப்பெரிய பிரச்சினையாக மாறும்.

ஆகவே, இவர்கள் எட்டு பேரவையும் ஆளும் கட்சியின் பக்கமோ – ஆளும் கட்சியின் கும்பலிலோ ஆசனங்களை ஒதுக்கிக் கொடுங்கள் – என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இந்தக் காரணிகள் குறித்து நான் ஆராய்ந்து முடிவு ஒன்றை வழங்குகின்றேன் என்றார்.

## கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஊழியர்கள் சிலருக்குக் கொரோனா!

கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பணிபுரியும் ஊழியர்கள் சிலருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கொவிட் 19 தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் தேசிய நடவடிக்கை மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக குறித்த 5 நட்சத்திர ஹோட்டல் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

ஹோட்டலில் உடற்பயிற்சி பிரிவில் பணியாற்றும் குழுவின் ஊழியர்களுக்கே இவ்வாறு கொரோனா தொற்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக உடற்பயிற்சி பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றுக்குள்ளானோருடன் முதல் மற்றும் இரண்டாவது தொடர்புகளை கொண்டிருந்தவர்கள் இனங்காணப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளார்கள் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
'குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்.'

# சிறைக் கைதிகள் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று!

கொழும்பு, நவ.14

கொழும்பு சிறைச்சாலையில் மேலும் 12பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறைச்சாலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 12 கைதிகளுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட கைதிகளின் மொத்த எண்ணிக்கை 172 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றை கருத்திற்கொண்டு கொழும்பு சிறைச்சாலை அதிகாரிகள், தமது உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேற 2 வாரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகும் கைதிகள், கந்தக்காடு அல்லது கல்லேல்ல சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளாகும் பெண் கைதிகள் வெலிக்கந்தை கொரோனா சிகிச்சைநிலையத்துக்கு அனுப்பப்படுகின்றனர்.

இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகிய அனைத்து கைதிகளும் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலை, பல்லன்சேன மற்றும் போகம்பறை சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசிடம் முகாமை இல்லை!

## மரிக்கார் எம்.பி. கிண்டல்



கொவிட் 19 வைரஸைக் கட்டுப்பத்துவதற்கு அரசாங்கத்தால் முடியாமல் போயுள்ளது. ஜனபதியும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளார். அரசாங்கத்திடம் சரியான முகாமைத்துவம் இல்லாமையே கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது என எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கொவிட் காரணமாக நாட்டின் நிகழ்கால நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மரிக்கார் எம்.பி. இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொழும் நகரில் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இறக்கின்றனர். ஆனால் மரணப்பத்திரத்தில் கொவிட் என்றே எழுதப்படுகின்றது. ஆனால் அது சுகாதார அமைச்சின் ஆவணத்தில் பதிவாவதில்லை. அதன் பின்னர் நாட்டின் மரணவீதம் குறைவு என அறிக்கை விடுகின்றனர்.

அதனால் கொவிட்டை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் சரியான முகாமைத்துவம் இல்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்றார்கள், நிறைவேற்று அதிகாரம் தேவை என்றார்கள். அத்தனையும் வழங்கினாலும் வேலை தெரியாது என்றால் அதனை மேற்கொள்ள முடியாது என்பது தற்போது உறுதியாகி இருக்கின்றது.

ஆரம்பத்தில் கொரானோவை கட்டுப்படுத்தியபோது, வெளிநாடுகளை உதாரணம் காட்டுகின்றார்கள், ஆனால் நாங்கள் செய்ததை யாரும் கதைப்பதில்லை என தெரிவித்த ஜனாதிபதி, இரண்டாவது அலை வந்தபோது, யுத்தத்தை கட்டுப்படுத்தியதுபோல் வைரஸை கட்டுப்படுத்த முடியாது எனத் தெரிவிக்கின்றார். அவருக்கு முடியாது என்பதை ஜனாதிபதி ஒப்புக்கொண்டுள்ளார். – என்றார்.

# வடக்கில் கடலட்டை பிடிக்க நிபந்தனையுடன் மீள அனுமதி



யாழ்ப்பாணம்,நவ.14

வடக்கு கடல் பிரதேசத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்டப் பணிப்பாளர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

எனினும் 'ஸ்கின் டைவிங்' எனப்படும் சாதாரண சுழியோடி முறையின் ஊடாக மாத்திரமே மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் எனவும், ஸ்கியூபா எனப்படும் சிலிண்டர் பயன்படுத்தி கடலட்டை பிடிக்க அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதிக்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளில் ஒன்றாக வடக்கு கடலில் கடலடை பிடிப்பது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பரிந்துரையின் அடிப்படையில் தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் கொறோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு முழு நாட்டையும் முடக்காமால் அடையாளப்படுத்தப்படுகின்ற பிரதேசங் களை மாத்திரம் தனிமைப்படுத்துவன் ஊடாக கட்டுப்படுத்துவது என்ற அரசாங்கத்தின் தற்போதைய தீர்மானத்திற்கு அமைவாக, கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியை நிபந்தனையுடன் வழங்குமாறு கடற்றொழில் அமைச்சர் மாவட்டத் திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள் ளார்.

அத்துடன், வடக்கு கடல் பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன எனத் தனக்கு தகவல்கள் கிடைக்கின்றன எனத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை பயன்படுத்துகின்றவர் களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேபோன்று, இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய செயற்பாடுகள் தொடர்பான – இருநாடுகளுக்கும் இடையிலான – அமைச்சு மட்டக் கலந்துரையாடல் விரைவில் நடைபெறவுள்ளதனால் எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் தொடர்பான பதிவுளை தனக்கு சமர்ப்பிக்குமாறும் அவர் தெரிவித்திருந்தார்.

# நாடு கடத்தப்படும் நிலைமைக்கு தள்ளப்பட்ட இலங்கை குடும்பம்!

## ஆஸ்திரேலியாவில் சம்பவம்



இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு குடியேறிய குடும்பமொன்றின் பிரதான விண்ணப்பதாரி உயிரிழந்தமையால், அந்தக் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களும் நாடு கடத்தப்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 6 வருடங்களுக்கு முன்னர், நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் கெம்பஸி பகுதியில் தற்காலிக வேலை விசா ஒன்றின்கீழ் ராஜ் உடவத்த, அவரது மனைவி மற்றும் 4 குழந்தைகளுடன் குடியேறி இருந்தார்.

ராஜ் உடவத்த கடந்த 2018 ஆம் ஆண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் அதற்கான சிகிச்சைகளைப் பெற்று வந்தார். ஆனாலும், சிகிச்சை பலனின்றி கடந்த செப்ரெம்பர் மாதம் அவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் ராஜ் உடவத்த, வேலை விசாவிற்கான முக்கிய நிபந்தனையை பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகியமையால், நாடு கடத்தப்பட்டுவிடுவோமா என்ற அச்சத்தில், மாணவர் விசாவிலுள்ள மூத்த மகளைத் தவிர, ஏனையோர் தஞ்சக்கோரிக்கை விண்ணப்பத்தைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில் ராஜ் உடவத்தவும் உயிரிழந்தார். இவ்வாறு அவர் உயிரிழந்து ஒரு மாதத்தின் பின்னர் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் தஞ்சக் கோரிக் கையும் நிராகரிக்கப்பட்டுவிட்டதாகக் குடிவரவு அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம் அல்லது ஒருமாததத்துக்குள் நாட்டைவிட்டு வெளியேறலாம் என்றும் குடிவரவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் ராஜ் உடவத்தவின் மனைவி, 'கல்வி கற்றுக்கொண்டிருக்கும் பிள்ளைகளுடன் கணவனையும் இழந்து நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன். ஆகவே, ஆஸ்திரேலிய அரசு, இந்த விடயத்தில் எங்களுக்கு கருணைகாட்ட வேண்டும் மேலும், கெம்பஸி தொடர்ந்து தங்கி யிருப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும்.' – என கோரிக்கை விடுத்துள்ளார்.

# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்தார் பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா!



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு, கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, கொரோனாவால் ஏற்பட்ட அழிவுகள் மற்றும் அதனை வெற்றி கொள்வதற்கான சவால்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை அரசாங்கததுக்கு எதிர்க்கட்சி வழங்கும் என சாரா ஹல்டனிடம் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கட்சி பேதங்களைக் கவனத்தில் கொள்ளாது, நவீன எதிர்க்கட்சியாக நாட்டின் மக்களுக்காகப் பணியாற்றுவோம் எனவும் சஜித் பிரேமதாஸ, பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகரிடம் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை கொரோனாவுக்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கையில், அரசாங்கத்தின் சில குறைபாடுகள் தொடர்பாகவும் தொடர்ந்து கவனம் செலுத்துவதுடன் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே எதிர்க்கட்சியின் நோக்கம் எனவும் சஜித் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

# ட்ரம்புக்கு ஏற்பட்ட நிலையே கோட்டாபயவுக்கும் ஏற்படும்!

## எச்சரிக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைப் போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இரண்டாவது தடவை ஆட்சியைக் கைப்பற்ற முடியாமல் போகும் நிலை ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மஹிந்தவின் புதிய கட்சியானது சுதந்திரக் கட்சிக்கு மட்டுமல்லாது முழு அரசியலுக்கும் சேதம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்து 100 நாள்களில் செய்தவற்றைக் கூட இந்த அரசாங்கம் இதுவரையில் செய்யவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், தற்போது பாரிய சுகாதார நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் இது தொடர்பாக அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கியுள்ளதாகத் தெரியவில்லையென்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் டொனால்ட் ட்ரம்புக்கு ஏற்பட்ட நிலைமையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.





## இன்பங்கள் மலரட்டும் துன்பங்கள் விலகட்டும்

### இந்து மத குரு பீடாதிபதி தீபாவளி வாழ்த்தில் ஆசி

இந்துமதகுரு பீடாதிபதியும், வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும், தென்புலோலி, புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தாவுமான சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்ட பாணிக தேசிகர் தமது தீபாவளிச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தொலைந்த இன்பம் மலரும் திருநாள் தீபாவளி. இந்தப் பண்டிகையை மக்கள் அனைவரும் சந்தோசமாகக் கொண்டாடுவதற்கு காரணகர்த்தா நரகாசுரன். ஆதி சக்தி பீடத்தின் தலைவி காமாக்யாதேவியை அவன் வணங்கி வந்தான். காமாக்யா தேவிக்கு கோவில் கட்டினான். மகாவிஷ்ணுவின் கட்டளையால் காமாக்யாதேவி அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் பிரச்சினைகளோ, சண்டைகளோ வராமல் பாதுகாத்து வந்தார். மகாவிஷ்ணு தன் பேராற்றலை, தன் அருட்சக்தியை நரகாசுரனுக்கு வழங்கினார். பாணாசுரன் என்றவி ஜந்து இவரோடு கூடியது. புத்தியை மாற்றியது. வசிஷ்டர் சாபம் வந்தது. மகாவிஷ்ணுவிற்குக் கொடுத்த வாக்கை நரகாசுரன் மீறினான். மகாவிஷ்ணு மதியாலும், சத்தியபாமாவின் உதவியாலும் நாகாசுரனை வீழ்த்தினார். அதுதான் இன்றைய தீபாவளி நாள்.

நடக்கும் நன்மைகளைக் கெடுப்பதற்கு என்றே தீய சக்திகள் உலகு எங்கும் உலாவுகின்றன. அவற்றைக் கண்டு மயங்கி, புத்திநிலையைத் தடுமாறவிட்டு, தன்னைத் தான் அழித்து கொள்கின்ற நிலைமை வந்துவிடுகிறது.



மகரிஷிகள், ஆத்ம ஞானிகள், வேதாந்திகள் எல்லாம் நடமாடும் தெய்வங்கள்ஆவார்கள். இவர்களை மதிக்கவேண்டும் என் பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண் டும்.

காமாக்யாதேவியின் செல்லப்பிள்ளையான நரகாசுரன்தான் அவருக்கு திருக் கோவிலைக் கட்டினான். காமாக்யாதேவி நரகாசுரனுக் கொஞ்சம் கருணை காட்டி இருக்கலாம்.

ஆகவே உயர்ந்தவர்கள், உத்தமர்களும் தீங்கு செய்யாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் தெய்வம் நம்மை காப்பாற்றும். ஆணவம், அகங்காரம் கூடாது என்ற பேருண்மையை இந்த தீபாவளி மூலம் நாம் கற்றுக் கொள்ளளாம்.

இந்தத் தீபாவளி அனைவரின் வாழ்விலும் ஒளி பெற வேண்டும் என்று கூறி ஆசீர்வதிக்கின்றோம்.

**இன்பமே சூழ்க.எல்லோரும் வாழ்க.**



# கொரோனாவுக்கு மத்தியில் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் ஒரு நம்பிக்கையான ஒரு காலநிலையைக் கட்டி எழுப்புவோம்

## வத்திக்கானில் இருந்து வந்த தீபாவளி செய்தியில் அழைப்பு



உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் ஆளுமையின் கீழ் வத்திக்கானில் இயங்கும் 'திருத்தந்தையின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் அமைப்பு', 14 நவம்பர் 2020 அன்று (இன்று) கொண்டாடப்படும் தீபாவளி பெருவிழாவிற்கு கிறிஸ்தவர்களும் இந்துக்களும், கொவிட் – 19 மற்றும் அதற்கு அப்பாற்பட்ட தொற்றுநோய்களின் போது ஒரு நேர்மறையான மற்றும் நம்பிக்கையான காலநிலையை மீண்டும் எழுப்புவோம் என்னும் தலைப்பில் 06 நவம்பர் 2002 அன்று செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இச்செய்தி, திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் இலங்கைக்கான தூதுவர் பேராயர் மேதகு கலாநிதி பிறயன் உடைக்வே ஆண்டகை மூலமாக யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மூலமாக பெறப்பட்டு, கலாநிதி ரூபன் மரியாம் பிள்ளை அடிகளாரால் மொழியாக்கம் செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

அன்புள்ள இந்து நண்பர்களே!

திருத்தந்தையின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் அமைப்பானது 14 நவம்பர் 2020 அன்று கொண்டாடப்படும் தீபாவளி பெருவிழாவிற்கு தனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிக்கிறது. கொவிட்19 தொற்று நோயின் கஷ்டங்களுக்கு மத்தியில் இந்த அர்த்தமுள்ள கொண்டாட்டம் அனைத்துப் பயத்தின் மேகம் மற்றும் ஏக்கம், பதற்றம் என்பவற்றை அகற்றி, உங்கள் மனதையும் இதயத்தையும் நட்பின் ஒளியாலும் ஒருமைப்பாட்டாலும் தாராள குணத்தாலும் நிரப்பட்டும்.

இந்த ஆண்டின் தீபாவளிச் செய்தியுடன் மதங்களுக்கிடையில் உரையாடலையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதற்குப் பொறுப்பான திருத்தந்தையின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் அமைப்பானது உங்களுக்கு வாழ்த்துக்களையும் காலத்திற்கேற்ற சில சிந்தனைகளையும் அனுப்பும் அன்பான பாரம்பரியத்தைத் தொடர்கிறது.

கடந்த 25 வருடங்களாகத் தொடர்ந்து அனுப்பப்படும் இந்தச் செய்திகளின் நோக்கம் நமது இரு மதங்களிலும் உள்ள மத மரபுகள் மற்றும் ஆன்மீக மரபுகள் ஆகியவற்றில் உள்ள நல்ல விடயங்களை அங்கீகரித்துப் பாதுகாத்து வளர்ப்பதாகும்.

இது மதங்களுக்கு இடையிலான பாராட்டு மற்றும் ஒத்துழைப்புக்கான ஒரு சிறிய படி மட்டுமே என்றாலும் பல ஆண்டுகளாக இந்த செய்திகள் பல்வேறு மட்டங்களில் இந்து – கிறிஸ்தவ உரையாடல் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குப் பங்களித்துள்ளன.

மேலும் நாம் எமது நலனுக்காகவும் உலக மனிதர்கள் எல்லோரினதும் நலனுக்காகவும் இணைந்து உழைக்க வழி வகுத்துள்ளது.

இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான பரஸ்பர உறவுகளை வடிவமைத்து, ஊக்குவித்து, ஆழப்படுத்தும் நோக்கத்துடன் இந்த உன்னத பாரம்பரியத்தை நாங்கள் தொடர்கிறோம்.

இந்த ஆண்டு கொவிட்19 தொற்று நோயை அடுத்து தீர்க்க முடியாத தடைகள், சமூக, பொருளாதார,அரசியல் மற்றும் ஆன்மீக சவால்கள் மத்தியில் எதிர்காலத்தில் ஒரு நேர்மறையான மனநிலையையும் எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்த சில எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

பரவலான கவலை – நிச்சயமற்ற தன்மை – பயம் இவற்றின் மத்தியில் நாம் எடுக்கும் முயற்சிகள் நம்மைப் படைத்துப் பாதுகாக்கும் கடவுள் நம்மைக் கைவிட மாட்டார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளன.



(11 ஆம் பக்கம் பார்க்க..)

### அடக்கமாகக் கொண்டாடுவோம்

ஆரவாரமில்லாது எதையுமே
அடக்கமாகக் கொண்டாட
ஆண்டவனால் தரப்பட்ட
அதிசயப் பண்டிகையே தீபாவளி!

நேரகாலம் தெரியாமல்
நினைத்தபடி நடந்தோமே!
தீர இதை விரட்டலாம்
தீபாவளியை வீட்டிலே கொண்டாடுவோம்!

கொரோனாவுக்கு நன்றிகூறி
கொண்டாடுவோம் தனிமையில்
சராசரி மனிதராகி எங்கும்
சமூக இடைவெளி பேணுவோம்.

- கே.எஸ்.சிவஞானராஜா

# தேசிய நல்லிணக்கம் எனும் ஒளிவிளக்கை ஏந்தி பயணிப்பதற்குத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும்!

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

கடற்றொழில் அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள தீபத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஒளிமயமான எதிர்காலம் ஒவ்வொருவருக்கும் வாய்க்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்களை உணர்த்தும் வெளிப்பாடாகவே தீபங்கள் ஏற்றி தீமைகள் அகன்றதென மகிழ்ந்து கொண்டாடும் தீபத்திருநாளில் அனைவரினதும் எண்ணங்களும்ஈடேறவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கொண்டுள்ள அனைத்து வகைப் பிரச்சினைகளுக்கும் கௌரவமானதும், நியாயமானதுமான தீர்வுகள் கிடைக்க வேண்டும் என விரும்புகிறார்கள்.

அதனை அடைந்து கொள்ள தேசிய நல்லிணக்கம் எனும் ஒளிவிளக்கை ஏந்தி பயணிக்கத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இருளை நீக்க, வீடுகளில் தீபங்களை ஏற்றுவதைப் போல நம்மைச் சூழவுள்ள பின்னடைவுகளிலிருந்தும், கல்வி மற்றும் பொருளாதார சரிவுகளிலிருந்தும் நாம் முன்னோக்கி பயணிக்க உறுதிகொள்ளவேண்டும்.



(11 ஆம் பக்கம் பார்க்க..)



# மண்மகிழ மனம் மகிழ மலர்ந்து வா தீபாவளி!

வண்ண வண்ண மத்தாப்பு
வகை வகையாய் பட்டாசு
எண்ண வெண்ண நாவூறும்
இனிப்பு நிறை பட்சணங்கள்
கண் எதிரே உறவினர்கள்
கல கலப்பைக் கொண்டுவர
மண்மகிழ மனம் மகிழ
மலர்ந்து வா தீபாவளி!

பெரு நோயின் தாக்கத்தால்
பெருந் தாக்கம் விளைந்திருக்கு
தெரு எல்லாம் களையிழந்து
உரு உடைந்து நிற்கிறது
வருங் காலம் தனையெண்ணி
மக்கள் மனம் தவிக்கிறது
வாடும் நிலை போயகல
வந்து நிற்பாய் தீபாளி!

நாகரிகம் பெருகி நின்று
நற் பழக்கம் ஓடியது
நாநிலத்தில் வாழ்க்கை முறை
நலன் இழந்து வாடியது
தீதெழுந்து சிறுமை உள்ளே
சிக்கும் நிலை ஆகியது
தீதகன்று ஒளி பரவ
தீபாவளி வந்து நிற்பாய்!

புத்தாடை மனம் இருக்கு
புதுத் தெம்பு வரவேண்டும்
சொத்தான சுற்ற மெலாம்
சுகங்காணும் நிலை வேண்டும்
நித்தியமாய் வாழ் நாளில்
நிம்மதியும் வர வேண்டும்
நீள் சுகத்தை சுமந்தபடி
நீ வருவாய் தீபாவளி!

மனக் கலக்கம் போக்குதற்கு
வழி கொண்டு வந்துவிடு
மாசகன்று மருள் அகல
வரங் கொண்டு வந்துவிடு
மனை எல்லாம் மங்கலங்கள்
மீண்டும் வர வந்துவிடு
மனமகிழ விருந்து தர
வந்து நிற்பாய் தீபாவளி!

உள முடைந்து நிற்பாரை
உயிர்ப் பூண்ட வந்துவிடு
வளம் இழந்து நிற்பாரை
நிலை உயர்த்த வந்துவிடு
நிலம் எங்கும் நிம்மதியே
நிலவி விட வந்துவிடு
நலன் மிக்க செய்தியுடன்
வந்து நிற்பாய் தீபாவளி!

இறை எண்ணம் எழுச்சிபெற
ஏந்தி வா நற்கருத்தை
கறை எண்ணம் கழன்றுவிட
காட்டி வா அக்கறையை
பிறை சடையான் அருளதனைப்
பெற்று வா தீபாவளி
நிறை குடத்தை வைத்துமே
நின் வரவைக் காத்திருப்போம்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# இம்முறை தீபாவளித் திருநாளை வீட்டுக்குள் கொண்டாடுவோம்!



## வாழ்த்துச் செய்தியில் செஞ்சொற்செல்வர்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் விடுத்துள்ள தீபாவளிச் செய்தி வருமாறு:-

இந்துக்களின் பாரம்பரிய பண்பாட்டு விழாக்களில் ஒன்றாகிய தீபாவளித் திருநாள் குறித்து அனைவருக்கும் வாழ்த்து தெரிவிப்பதில் ஆனந்தமடைகிறேன்.

இருள்சூழ்ந்த நிலையில் தவித்த மக்களுக்கு விடிவு கிடைத்த நாள் தீபாவளி. நரகாசுரன் என்ற அசுரன் இறைவனால் அழிக்கப்பட்டு அறம் நிலைநாட்டப்பட்டு அனைவரும் தர்மத்தோடு வாழ வழிவகுத்த நாள் தீபாவளி. இல்லங்கள் தோறும் தீபம் ஏற்றி இறைவனைப் பிரார்த்தித்து இந்த இனிய நன்னாளை அமைதியாகக் கொண்டாடுவோமாக!

இன்று உலகம் முழுவதும் கொரோனா என்ற கொடிய நோயின் தாக்கத்தினால் மக்கள் அவலப்படுகிறார்கள். இந்நிலையில் நாம் ஆடம்பரங்களற்ற அமைதியான பிரார்த்தனை நாளாக இந்நாளைக் கருதவேண்டும். வீட்டுக்கு வெளியே செல்வதைத் தவிர்த்து வீட்டிலேயே இவ்வாண்டு தீபாவளிப் பண்டிகையை கொண்டாட வேண்டிய தேவை உண்டு. பல இலட்சம் உயிர்களை கொரோனா நோய் பறித்திருக்கும் வேளையில் நாம் அறிவு பூர்வமாகச் சிந்தித்து செயற்படவேண்டும். எங்களையும் எங்கள் சமுதாயத்தையும் காப்பாற்றுவதற்கு நாம் முன்வரவேண்டும்.

எனவே இயன்றவரை வீடுகளிலேயே தீபாவளி நாளில் தங்கியிருப்பது நல்லது. உற்றார், உறவினர், நண்பர்களுக்குத் தொலைபேசி ஊடாக வாழ்த்தைத் தெரிவித்து எம் அன்பைப் பெருக்குவோம். இறையருளால் உலகம் அமைதி பெற்று நாம் சுதந்திரமாக நடமாடும் நாள் விரைவில் வர வேண்டும் என்று அனைவரும் பிரார்த்திப்போமாக!

# அரசியல் பிரதிநிதிகள் அனைவரினதும் ஒன்றுபட்ட செயற்பாட்டுக்கு அழைப்பு!

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் சுரேன் இராகவன் விடுக்கிறார்



தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தமது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தீபாவளிப் பண்டிகையை கொண்டாடிக் கொண்டிருக்கும் உலக வாழ் இந்துக்கள்

அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மானிடர்களை துன்புறுத்திய நரகாசூரனை கிருஷ்ண பகவான் வதம் செய்தமையை இந்துக்கள் நினைவு கூர்ந்து தீபமேற்றிக் கொண்டாடும் இந்நாளில், எங்கள் ஒவ்வொருவரினதும் வீடுகளில் ஏற்றப்படும் ஒளிக்கீற்றுகள், நம்நாடு உள்ளிட்ட முழு உலகத்தினையும், இருளுக்குள் தள்ள முயற்சிக்கும் கொவிட் -19 வைரஸின் தாக்கத்தையும், அதனால் சவாலுக்கு உள்ளாகியிருக்கும் நம்நாட்டின் பொருளாதரத்தையும், ஒன்றுபட்டு, உறுதியோடு மீண்டும் கட்டியெழுப்புவதற்கான

சக்தியினை வழங்கவேண்டுமென்பதே எனது பிராத்தனை.

நாடாளுமன்றத்திலும் தமிழ் அரசியல் பரப்பிலும் செயற்படும் அரசியல் பிரதிநிதிகள்

அனைவரும், வடக்கு கிழக்கு உள்ளிட்ட நம்நாட்டின் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் அவர்கள் எதிர்காலத்தில் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்காக குரல்கொடுப்பதற்காக ஒன்றுபட்டு செயற்படுவதற்கு முன்வரவேண்டுமென இந்த நன்நாளில் நான் அழைப்பு விடுக்கிறேன்.

சமூகப் பாதுகாப்புக்களை பின்பற்றி உங்கள் குடும்பத்தாருடன் தீபாவளி பண்டிகையினை மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள். - என்று உள்ளது.

# அர்த்தமற்ற ஆரவாரங்கள் நாம் மீள்வதற்கு வழியாகா!

## இந்து சமயப் பேரவையின் தலைவர் தம் தீபாவளிச் செய்தியில் விளக்கம்

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சி. சக்திகிரீவன் விடுத்துள்ள தீபாவளிச் செய்தி வருமாறு:-

அறிவுபூர்வமாகவும், புத்திபூர்வமாகவும்செயற்பாடுகளை தம்மில் தாம் பேணுவதன் மூலமே கொரோனாத் தொற்றில் இருந்து உலகம் மீளமுடியும்.

இப்புனித குறிக்கோளை ஏற்று வாழ அந்தரங்க சுத்தியோடு தீபாவளி நன் நாளில் திடசங்கற்பம் பூணுவோமாக!

மனித குலம் தொலைநோக்கற்று வாழப் பழகியதால் இயற்கையோடு முரண்படுகிறது. இயற்கையே தெய்வம். இவ்வுண்மையை மறந்து, இன்பம் எது, துன்பம் எது என்று தெரியாது, தலைதடுமாறி வாழப்பழகிவிட்டோம். இத்துன்பச் சூழலிலும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தி, கொரோனாவை விரட்டியடிப்போம் எனும் மனோபாவம் வராதிருப்பது நமது தவக்குறையேயாகும்.

ஆலயங்களில் நடைபெறும் பூஜை வழிபாட்டுடன் யோகம், தியானம் போன்றவற்றை ஒவ்வொரு தனிமனிதனும் பேணுவதன் மூலம் உடற்பலத்தையும் உளப்பலத்தையும் பெறுகிறான். இதுவே அனைவருக்கும் இன்று வேண்டியதாகிறது. இது தவிர்ந்த ஆரவாரங்கள் இச்சூழலில் இருந்து நாம் மீள்வதற்கு வழியாகா.



ஆதலால் நாமனைவரும் வீடுகளில் இருந்து தீபாவளி தினத்தில் கொடிய அசுரபலத்தோடு உலகை பீடித்திருக்கும் கொரோனவை விரட்ட எல்லாம் வல்ல ஸ்ரீ சிவாகம சுந்தரி சமேத ஸ்ரீ மத் நடராஜப் பெருமானை பிரார்த்திப்போமாக.

காலைக்கதிர் Kalaikkathir

# உண்மைத் தீபாவளி எமக்கு எப்போது?

மழைக்குப் பேர் போன ஐப்பசியின் முக்கியப் பண்டிகை தீபாவளி. ஒரு பக்கம் அடித்து வெளுக்கும் மழை, மறுபக்கம் கொரோனா அசுரனினால் செயலிழந்து போன உலகம். இவற்றுக்கு மத்தியில் நரகாசுரனை வதம் செய்ததை கொண்டாடும் தீப ஒளித் திருநாளாம் தீபாவளி.

தீபாவளி பண்டிகை, இந்துக்களின் முதன்மையான பண்டிகைகளில் ஒன்று. அரக்கனான நரகாசுரன் வதம் செய்யப்பட்ட தினத்தைத்தான் தீபாவளியாக உலகெங்கிலும் உள்ள இந்துக்கள் கொண்டாடுகிறார்கள்.

**நரகாசுரன் வதம்**

இப்போது உள்ள நேபாளத்துக்கு அருகே உள்ள பிரக்யோதிஷ்பூர் என்ற பூமியின் மன்னனாக இருந்தவன்தான் நரகாசுரன். மக்களுக்கு மட்டு மல்லாமல் தேவர்களுக்கும் பெரும் மிரட்டலாக, பயங்கர அச்சுறுத்தலாக இருந்தவன் நரகாசுரன்.

நரகாசுரன், பூதேவியின் மகன். கடும் தவம் இருந்த நரகாசுரன், பிரம்மனிடமிருந்து ஒரு வரத்தைப் பெறுகிறான். அதாவது, எனது தாயாரின் கையால்தான் எனக்கு மரணம் நிகழ வேண்டும். வேறு யாரும் என்னை அழிக்க முடியாது என்பது தான் அந்த வரம்.

நரகாசுரனின் கடும் தவத்தை மெச்சிய பிரம்மனும், வேறு வழியின்றி அந்த வரம் கொடுக்கிறார். அதன் பிறகு நரகாசுரனின் அட்டகாசம் அதிகரிக்கிறது.

கடவுள்களின் அன்னை என்று கூறப்படும் அதிதியின் காது வளையங்களையே திருடியவன் நரகாசுரன். அது மட்டுமா, பல்வேறு கடவுள்களின் 16 ஆயிரம் மகள்களை கடத்தி வந்து தன் அந்தப்புரத்தில் சிறை வைத்தவன்.

நரகாசுரனின் கொட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துப் போனதையடுத்து அனைத்து கடவுள்களும் ஒன்று சேர்ந்து கிருஷ்ணனை சந்தித்தனர். நரகாசுரனை ஒடுக்கி, அவனிடமிருந்து தங்களுக்கும், மக்களுக்கும் விடுதலை தர வேண்டும் என முறையிட்டனர்.



கடவுள்களே வந்த முறையிட்டதால் நேரடியாக கிருஷ்ணர் களம் இறங்கினார். நரகாசுரன் பெற்ற வரம் குறித்து அறிந்த கிருஷ்ணர், தனது ரத சாரதியாக மனைவி சத்யபாமாவை (இவர் பூதேவயின் மறு உருவம் என்பதால்) அழைத்துக் கொண்டு கிளம்புகிறார்.

நரகனுக்கும், கிருஷ்ணனுக்கும் இடையே கடும் சண்டை தொடங்குகிறது. அப்போது நரகாசுரன் விட்ட ஒரு அம்பு தாக்கி கிருஷ்ணன் மயக்கமடைகிறார். இதையடுத்து சத்யபாமா, வில்லை எடுத்து, அம்பைத் தொடுத்து நரகாசுரனைக் குறி பார்த்து தாக்குகிறார். நகராசுகரன் வீழ்கிறான். பின்னர் கிருஷ்ணர், நரகாசுரன் பிடியில் இருந்த அனைத்துப் பெண்களையும், அதிதியின் காது வளையங்களையும் மீட்டு தேவர்களிடம் ஒப்படைத்தார். நரகாசுரனை அதிகாலையில் வதம் செய்து முடித்த கிருஷ்ண பகவான், எண்ணை தேய்த்து தலை முழுகினார். இதுதான் இன்றளவும் தீபாவளியன்று அதிகாலையில் எண்ணை தேய்த்து குளிக்கும் பழக்கமாக தொடருகிறது.



**தீபாவளியின் இன்னொரு கதை**

இதேபோல இன்னொரு கதையும் தீபாவளிக்கு உள்ளது. அது ஏன் தீபத் திருநாள் என்று அழைக்கப் படுகிறது என்பதற்கான கதையும் கூட. ராவணனை வென்று சீதையை மீட்கிறார் ராமன். பின்னர் சீதையுடன் அயோத்திக்குத் திரும்புகிறார். மன்னனாக முடி சூடுகிறார். இதைத்தான் தீபாவளியாக மக்கள் கொண்டாடினராம். ராமரும், சீதையும் அயோத்திக்கு வந்தபோது அன்று அமாவாசை இரவு. இதனால் இருளில் தாங்கள் எங்கே போகிறோம் என்பது தெரியாமல் தடுமாறியுள்ளனர். இதையடுத்து அயோத்தி மக்கள் தங்கள் வீடுகளுக்கு முன்பு அகல் விளக்குகளை ஏற்றி ஒளி கூட்டினர். இதனால் ஏற்பட்ட வெளிச்சத்தில், தீப ஒளியில், சரியான பாதையில் நடை போடத் தொடங்கினாராம் ராமரும், சீதையும். இதனால்தான் தீபாவளிக்கு தீப ஒளித் திருநாள் என்ற பெயரும் வந்தது.

**பிற கதைகள்**

விஷ்ணு, லட்சுமி தேவியின் திருமணம்தான் தீபாவளியாக கொண்டாடப்படுகிறது என்ற ஒரு புராணக் கருத்தும் உண்டு.

வங்கத்தில் காளி தேவியை வணங்கும் நாளாக தீபாவளி கொண்டாடப்படுகிறது.

இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் தீபாவளி ஒரு விதமாக கொண்டாடப்படுகிறது. வட இந்தியாவில் தீபாவளித் திருநாள் மொத்தம் நான்கு நாள்கள் கொண்டாடப்படுவது வழக்கம். இந்த நான்கு நாளும் ஒரு வகையான கொண்டாட்டத்தில் மக்கள் ஈடுபடுகிறார்கள். பூஜைகள் செய்கிறார்கள். முதல் நாளை நரக சதுர்தசியாக கொண்டாடுகிறார்கள். தீய சக்திகள் அழிந்து (அதாவது நரகாசுகரன் அழிந்த நாள்) வாழ்வில் வளம் பிறக்கும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. தீபாவளி தினமான 2ஆவது நாள் அமாவாசை தினம். இந்த நாளில் லட்சுமி தேவியை வணங்குகிறார்கள். 3 ஆவது நாளில் கார்த்திகை சுத்த பதயாமி தினமாக கொண்டாடப்படுகிறது. 4 ஆம் நாள் யம திவிதியை தினமாக கொண்டாடுகிறார்கள். அதாவது அன்றைய தினம் பெண்கள் தங்களது சகோதரர்களுக்கு புத்தாடைகள் கொடுத்து வணங்கி, ஆசிர்வாதம் பெறும் தினம் இது.

**பட்டாசு வெடிப்பது ஏன்?**

தீபாவளி என்றால் பட்டாசுகளும், பிரகாசமிடும் அகல் விளக்குகளும் இணைந்தே நினைவுக்கு வரும். ஏன் விளக்கு ஏற்றிக் கொண்டாடுகிறோம், பட்டாசுகள் வெடிப்பது ஏன் என்பதற்கும் ஒரு காரணம் உண்டு. வீடுகளில் அன்றைய தினம் விளக்



குகளை ஏற்றி வைப்பதன் மூலம் வீடுகளில் இருள் விலகி, வளம் பெருகும் என்பது ஐதீகம். அயோத்திக்கு ராமரும், சீதையும் வந்தபோது அந்த நகர மக்கள் விளக்கேற்றி வைத்தனர் என்ற புராண வழக்கமும் இதற்கு இன்னொரு காரணம். அதே போல, தீய சக்திகளை விரட்டியடித்ததை மகிழ்ச்சியுடன் கொண்டாட பட்டாசு என்பது பட்டாசுகளுக்கான ஐதீகம். தென்னிந்தியாவில் நரகாசுரன் வதமாக தீபாவளி கொண்டாடப்படுகிறது. வட இந்தியாவில் ராமரும், சீதையும் அயோத்தி திரும்பியதையும், ராமர் பட்டம் சூட்டிக் கொண்டதையுமே, தீபாவளியாக கொண்டாடுகிறார்கள்.

இப்படி ஒவ்வொரு விதமாக ஒவ்வொரு பகுதி மக்களும் கொண்டாடினாலும் கூட தீபாவளியின் மையக் கருத்து, நலமும், வளமும் வந்து சேரும் தீபத் திருநாள் என்பதாகவே உள்ளது என்பதால் தீபாவளித் திருநாள், இந்துக்களின் மிக முக்கிய திருநாளாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் இம்முறை கொரோனா வைரஸ் என்ற பேரரக்கன் நம்மைச் சூழ்ந்திருப்பதால் அந்த அரக்கன் ஒழியும் – உலகை விட்டு அகலும் – நாள் தான் எமக்கு உண்மைத் தீபாவளி.



# யுத்தம் பாதித்த வடக்கு தொடர்ந்து புறக்கணிப்பு!

## கஜேந்திரன் எம்.பி. காட்டம்




யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு பகுதியில் எந்த வித அபிவிருத்திக்கும் 2020 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்தால், அரசாங்கம் பாரிய தோல்வியைச் சந்திக்க நேரிடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான விவாதம், நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்த நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கஜேந்திரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த தேர்தல் காலத்தின்போது பலருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

சுதந்திரக் கட்சி சார்ந்தவர்கள் மற்றும்பொதுஜன பெரமுன கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு இவ்வாறான வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறையில் இவ்வாறு பொறுப்பேற்றுக் கொண்ட ஒருவரின் பதவி கடந்த ஒகஸ்ட் மாதம் நிறுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் உள்ள பட்டியலில் அவரின் பேர் இருந்ததாகவும் பின்னர் வந்த பட்டியலில் இல்லையென்றும் அவர் இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

இதுபோன்று 600 இற்கும் அதிகமானவர்களின் பெயர்கள் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளன. வட.பிராந்திய போக்குவரத்துத் திணைக்களத்தில் தகுதியற்றவர்கள் நியமிக்கப்படுகின்றனர். தேர்தல் காலத்தில் தமக்குப் பணியாற்றியவர்கள் இவ்வாறு பதவியில் இணைக்கப்படுகின்றனர்.

இரண்டு அரசாங்கங்களும் மாறி மாறி இவ்வாறான செயற்பாடுகளையே தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட செலவீனங்களையும் தாண்டிய சட்டவிரோதமான செலவீனங்களுக்கும் சேர்த்து அங்கீகாரம் பெறுவதற்கு விவாதம் நடைபெறுகிறது. இந்த விவாதத்தில் எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற வட.மாகாண போக்குவரத்து சபையானது சீரழிந்து வருகிறது. ஏதாவது விபத்தொன்று இடம்பெற்றால் இதற்கான தீர்ப்புக்காக சம்பந்தப்பட்ட சாரதிகள் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றனர். ஏனைய மாகாணங்களில் அவ்வாறு இல்லை.

வட.மாகாணத்தின் கல்வி நிலைமை மோசமாகியுள்ளது. கல்வி நிர்வாக சேவையின் வகுப்பு ஒன்றைச் சேர்த்த வட.பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை.

பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் ஆக்குகின்றோம் என்ற போர்வையில் பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லும் நிலைமைகள் காணப்படுகின்றன.

மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள முன்பள்ளிகளுக்கு வசதிகள் எதுவும் இல்லை. இவ்வாறான நிலையில் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் முன்பள்ளிகளை அமைத்து ஆசிரியர்களுக்கு சம்பளங்களை வழங்கி அவற்றை நிர்வகித்து வருகிறது.

மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள விடயம் வேண்டும் என்றே சீரழிக்கப்படுகின்றன. இந்த மாதிரியான முறைகேடான செயற்பாடுகளை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

யுத்தத்தால் அழிக்கப்பட்ட வடபகுதியில் எந்தவித அபிவிருத்திக்கும் 2020ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த நிலைமை தொடர்ந்தால் அரசாங்கம் பாரிய தோல்வியொன்றைச் சந்திக்கும். – என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# உயிரிழந்த உடல்களின் தகனம் கலாசாரத் தேர்வுகளின் அடிப்படை

## ஐ.நா. கருத்துரைப்பு

உயிரிழந்த உடல்களின் தகனம் என்பது அவரவர் கலாசாரத் தேர்வுகளை அடிப்படையாக கொண்டவை என ஐ.நா.அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதியுமான ஹனா சிங்கர், இலங்கை அரசாங்கத்துக்கு குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதற்கு, முஸ்லிம் சமூகம் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது.

அதேபோன்று முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கை நியாயமானது என்றதன் அடிப்படையில் பல சமூக அமைப்புக்களும் அவர்களுக்கு ஆதரவாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே, இந்த விடயம் தொடர்பாக இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு, ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதியுமான ஹனா சிங்கர் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தொற்று நோயால் இறந்தவர்கள் மூலம் வைரஸ் பவவுவதைத் தடுப்பதற்கு, அந்த உடலங்கள் தகனம் செய்யப்பட வேண்டும் என்ற பொதுவான அனுமானம், ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்பட்டவை அல்ல.

அதற்குப் பதிலாக தகனம் என்பது அவரவர் கலாசாரத் தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யும்போது சிறுபான்மையினரின் உரிமைகளை அரசாங்கம் மதிக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை அரசாங்கம் பின்பற்றவேண்டும் எனவும் அந்த சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பிரதேச ரீதியாக 10 பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை என பீரிஸ் தகவல்

புதிய அராங்கத்தின் கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக பிரதேச ரீதியாக 10 பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் நேற்று கல்வி அமைச்சில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

உயர்கல்வி நிறுவனம் இல்லாத 10 மாவட்டங்களைத் தெரிவுசெய்து அந்த மாவட்டங்களில் பல்கலைக் கழகங்களை ஸ்தாபிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

அத்துடன் அதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக கல்வி அமைச்சு



விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொலைக்கல்வி நிகழ்ச்சியில் பங்கேற்காத மாணவர்களுக்கு விசேட திட்டம் அறிமுகம்

## இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த

கொழும்பு, நவ. 14

தொலைக்கல்வி முறையின் மூலம் மீள ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள பாடசாலை தொலைக்கல்வி நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாமல் போகும் மாணவர்களுக்கு, பாடவிதானங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்ட பாடங்களை தமது பாடசாலைகள் ஊடாக பெற்றுக் கொள்ளும் முறை வகுக்கப்பட்டுள்ளது.

கொரோனா நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள கல்வி நடவடிக்கைகளை தொலைக்கல்வி முறையின் மூலம் மீள ஆரம்பிக்கப்படவுள்ள கூட்டு வேலைத்திட்டம் தொடர்பாக கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக இம்மாதம் 15 ஆம் திகதி முதல் இந்த விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்

தரம் மூன்றில் இருந்து கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரம் வரையான வகுப்புக்களின் பாடங்களை பூர்த்தி செய்யும் வகையில், பிரபல ஆசிரியர் குழாமின் பங்கேற்புடன் குறிப்பிட்ட பாடங்களைத் தொகுத்து ஒலிப் பதிவு செய்யும் நடவடிக்கை இந்நாள்களில் இடம்பெறுகின்றது.

இதன் பின்னர் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடாக வாரத்தில் 7 நாள்களும் வீட்டில் இருந்தவாறு மாணவர்கள், நிகழ்ச்சியில் பங்கேற்க சந்தர்ப்பம் கிட்டும். தமிழ் மற்றும் சிங்கள மொழிமூல மாணவர்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர ஒன்லைன் ஊடாகவும் இந்த வசதி கிடைக்கவிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாமல் போகும் மாணவர்களுக்கு, பாடவிதானங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்ட பாடங்களை தமது பாடசாலைகள் ஊடாக பெற்றுக் கொள்ளும் முறை வகுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த மேலும் தெரிவித்தார்.

ஊழியர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு தையலாளர்கள். உதவியாளர்கள் தேவை

தொடர்புகளுக்கு:- 077 7114 848
applicationagi@outlook.com

வீடு தேவை

ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதியில் சிறிய கைத்தொழில் செய்ய உகந்த விசாலமான வீடு தேவை.

தொடர்புகளுக்கு -
0760117002

### நாடாளுமன்றத்தில் சுமந்திரன் பகிரங்கக் கோரிக்கை

# யுத்தத்தில் வீழ்ந்த உறவுகளை அஞ்சலிக்கும் சட்ட ரீதியான உரித்தைத் தடுக்க வேண்டாம்

## பெருந்தன்மையாக நடக்குமாறு அரசை வலியுறுத்துகிறார் அவர்



கொழும்பு,நவம்பர் 13

"யுத்தத்தில் போராடி மடிந்தவர் களை நினைவு கூர்ந்து, அஞ்சலிப்ப தற்கு அவர்களின் பெற்றோருக்கும் குடும்பத்தவர்களுக்கும் ஏனையோரும் உள்ள சட்ட ரீதியான உரிமையைத் தடுக்க 'கொவிட் - 19' விடயத்தையோ வேறு விவகாரங்களையோ பயன்படுத்த வேண்டாம் என அரசைக் கோருகிறேன். இது விடயத்தில் பெருந்தன்மையாக நடந்து கொள்ளுமாறு அரசை வேண்டுகிறேன்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கோரினார்.

அவர் இது தொடர்பில் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இது நவம்பர் மாதம். யுத்தங்களில் வீழ்ந்த நாயகர்களை உலகம் முழுவதும் உள்ள மக்கள் நினைவு கூரும் காலம் இது.

எமது நாடும் கூட துரதிஷ்ட வசமாக மூன்று தசாப்த கால யுத்தத்தைக் கடக்க வேண்டியதாக இருந்தது.

வடக்கிலும் கிழக்கிலும் கூட அரசுக்கு எதிராகப் போராடி வீழ்ந்த உறவுகளின் தாய்மார்கள், சகோதரிகள், சகோதரர்கள், தந்தைமார், பிள்ளைகள் பலர் இருக்கின்றார்கள். அந்த மறைவை அவர்கள் நினைவு கூரும் மாதம் நவம்பர்தான்.

ஜே.வி.பியின் ஸ்தாபகர் றோஹண விஜவீரவை நினைவு கூரவும் கௌர விக்கவும் இங்கு அனுமதிக்கப்படுகின்றது.

துரதிஷ்டவசமாக உயிரிழந்தவர் களை நினைவு கூரக் கூட இங்கு பாகுபாடு - பாராபட்சம் - காட்டப்படுகின்றது. தமிழர்கள் ஒதுக்கப்படுகின்றார்கள். எங்கள் பெற்றோர்கள் தமது உறவுகளை நினைவு கூர அனுமதிக்கப்படுகின்றார்கள் இல்லை.

நான் இந்த ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையில் இது குறித்துப் பேசுவ தற்கு காரணம் உண்டு.

தங்கள் அன்புக்குரிய உறவுகள் புதைக்கப்பட்ட மயானங்களுக்கு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, நினைவு கூர்வதற்கு நீண்ட பல வருடங்களைச் சென்று வருவது போல நவம்பர் மாதத்தில் அவர்கள் செல்லும் போது அவர்களைத் தடுப் பதற்கு கொவிட் 19 பிரச்சினையைத்தான் அதிகாரிகள் பயன்படுத்துகின்றனர்.

அந்த நாள்கள் மிக விரைவில் வருகின்றன. அத்தகைய நிலையில் பொலி ஸாரும் மற்றைய அதிகாரிகளும் நீதிமன்றங்களைத் தேடி ஓடுவார்கள். 106 பிரிவின் கீழ் (தடை விதிக்கும்) உத்தரவைக் கோருவார்கள். அது பொதுமக்களுக்கு தொல்லை கொடுப்பது பற்றியது. அது இங்கு பொருந்தாது. இது பொதுமக்களுக்குத் தொல்லை ஏற்படுத்தும் விடயமே அல்ல. இது வீதிகளில் நடப்பது அல்ல. தள்ளி மயானத்தில் நடப்பது.

ஆகவே, இது விடயத்தில் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுமாறு அரசை வேண்டுகிறேன்.

யுத்தத்தில் போராடி மடிந்தவர்களை நினைவு கூர்ந்து, அஞ்சலிப்பதற்கு அவர்களின் பெற்றோருக்கும் குடும்பத்தவர்களுக்கும் ஏனையோரும் உள்ள சட்ட ரீதியான உரிமையைத் தடுக்க 'கொவிட் - 19' விடயத்தையோ வேறு விவகாரங்களையோ பயன்படுத்த வேண்டாம் என அரசைக் கோருகிறேன். - என்றார்.

# யாழ்ப்பாணம் ஆலயங்களில் இடம்பெறும் தீபாவளி வழிபாடுகளில் ஒன்றுகூடாதீர்கள்

## மக்களிடம் அரச அதிபர் மகேசன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம் மாவட்ட ஆலயங்களில் தீபாவளிப் பூஜை வழிபாடுகளில் ஐந்து பேருக்கு மேல் ஒன்றுகூடாதீர் கள் என மாவட்ட அரச அதிபர் க. மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் இன்று மேலும் தெரிவித்ததாவது:-

இந்துக்களின் பண்டிகை யாகிய தீபாவளிப் பண்டிகை நாளை கொண்டாடப்படவுள்ள நிலையில் ஆலயங்களில் பூஜை வழிபாடுகளும் இடம்பெறும். அத்தோடு தற்போது இந்துக் கோயில்களில் விரத பூஜைகளும் இடம்பெற்று வருவதால் பொதுமக்கள் கோயிலுக்குச் சென்று ஒன்றுகூடுவதை தவிர்க்க வேண்டும். ஏற்கனவே இந்து கலாசார திணைக்களத்தினரால் ஆலயங்களுக்குள் 5 பேருக்கு மேல் செல்ல அனுமதிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, யாழ்ப்பாணத்தில் மக்கள் வீடுகளில் இருந்தவாறு தீபாவளியைக் கொண்டாட வேண்டும். அத்துடன் ஆலயங்களுக்குச் செல்வதையும் தவிர்த்து வீடுகளில் இருந்தவாறு கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தினரால் ஏற்கனவே ஆலயங்களுக்குரிய சுகாதார விதிமுறைகள் தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் ஆலயங்களுக்குச் சென்று ஒன்றுகூடுவதைத் தவிர்த்து வீடுகளிலிருந்து அமைதியான முறையில் இவ்வருட தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் - என்றார்.

# 'எம்மவர் உயிர்களை நாமே பாதுகாப்போம்'

## யாழில் விழிப்புணர்வுச் செயற்றிட்டம்





'எம்மவர் உயிர்களை நாமே பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் இன்று கொரோனா விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமியின் அனுசரணையுடன், கனடா தென்மராட்சி சேவை நிறுவனத்தால் குறித்த விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் இன்று காலை 10 மணிக்கு தொன்மராட்சி - சாவகச்சேரியில் ஆரம்பமான விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தின்போது இலவச முகக்கவசங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

# ஆளுங்கட்சியுடன் இணையுமாறு சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு

ஆளுங்கட்சியுடன் இணையுமாறு முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுத்தார் இராஜங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத் கமகே.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகா முக்கிய மான நபர். அவரை நாம் மதிக்கின்றோம். இராணுவத் தளபதியாக இருந்த போது கம்பீரமாக இருந்தார். இன்று அந்தப் பக்கம் சென்று பலவீனமடைந்துள்ளார்.

கடந்த நல்லாட்சியின்போது அவர் பாதுகாப்பு அமைச்சை எதிர்பார்த்தார். ஆனால், அவருக்கு வன ஜீவராசிகள் அமைச்சுப் பதவியே வழங்கப்பட்டது. நிதி கூட உரிய வகையில் ஒதுக்கப்படவில்லை. எனவே, எங்கள் பக்கம் வாருங்கள் உங்களை மதிக்கின்றோம் - என்றார்.

அத்துடன், ஸ்ரீலங்கா முஸ்



லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் ஐக்கிய மக்கள் சக்தியினரை நம்பி இன்று தனிமைப் படுத்தப்பட்டுள்ளார் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

# தீபாவளியைக் கொண்டாடுபவர்களுக்கு சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுப்பு!

தீபாவளி பண்டிகையைக் கொண்டாடும் மக்கள், தீப்பற்றக்கூடிய கை கழுவும் திரவங்களைப் பயன்படுத்தி விட்டு, விளக்குகளை ஒளிரச் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று, பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள நிலையில், பெரும்பாலானோர் அற்ஹகோல் அடங்கிய கை கழுவும் திரவத்தை அதிகம் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், இன்று (சனிக்கிழமை) தீபாவளி பண்டிகையை கொண்டாட உள்ளவர்கள், பட்டாசு, மத்தாப்பு போன்ற பல்வேறு விதமான வெடி வகைகளை பயன்படுத்தும் சந்தர்ப்பம் உள்ளமையால் தீபற்றக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.


இவ்வாறு தீபற்றக்கூடிய அபாயத்தை குறைப்பதற்காகவே அற்ஹகோல் அடங்கிய கை கழுவும் திரவத்தை கை உலர்த்தும் வரை தேய்ப்பதற்கு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

வைத்தியசாலைகள் மற்றும் கிளினிக்குகள் போன்ற சுகாதார அமைப்புகளுக்கு, பக்டீரியாவைக் கொல்ல உகந்த அற்ஹகோல் செறிவு 70 வீதம் முதல் 95 வீதமாகுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம், அமெரிக்க நோய்த்தடுப்பு, பாதுகாப்பு நிலையம் மற்றும் இலங்கை நுண்ணுயிரியல் கல்லூரி என்பன கை கழுவ பயன்படுத்தும் திரவம், 60 – 70 வீதம் அல்லது அதற்கு அதிகபடியான எதனோலை கொண்டிருக்க வேண்டுமென குறிப்பிட்டிருக்கின்றன. இத்தகைய திரவங்கள் இலகுவில் தீபற்றக்கூடியவையாகும்.

ஆகவேதான், உடனே தீப்பற்றக்கூடிய சிறிதளவு அற்ஹகோல் அடங்கிய கை கழுவும் திரவங்களைப் பயன்படுத்திவிட்டு ஒளி விளக்குகளை ஒளிரச்செய்வதைத் தவிர்க்க வேண்டும் என சுகாதார அமைச்சு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத மின்சாரத்தால் பறிபோனது நான்கு பிள்ளைகளின் தாயின் உயிர்!



அக்கரபத்தனை பகுதியில் மிருகங்களுக்காகப் பொருத்தப்பட்ட சட்டவிரோத மின்சாரத்தில் சிக்கிய நான்கு பிள்ளைகளின் தாய், பரிதாபமான முறையில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் அக்கரபத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்ராசி நிவ் போட்மோர் பகுதியை சேர்ந்த காளி கிட்ணம்மாள் (65 வயது) என்ற நான்கு பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த தாய், பூஜைக்காக வாழையிலை வெட்டுவதற்காக தோட்டததுக்குச் சென்றுள்ளார். நீண்ட நேரம் வராதமையால், வீட்டில் உள்ளவர்கள் தோட்டத்துக்கு சென்று பார்த்தபோது அவர், இறந்த நிலையில் கிடந்துள்ளார்.

அதனை தொடந்து சம்பவம் அறிந்து அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், பொருத்தப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளமை கண்டறியப்பட்டது.

அந்தத் தாயின் சடலம் நுவரெலியா நீதிவானின் விசாரணைகளைத் தொடர்ந்து, பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரபத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடுகளில் இருந்து 31 பேர் நாடு திரும்பினர்

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 31 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இரவு 10.30 மணியளவில், ஐக் கிய அரபு எமிரேட்ஸுக்கு தொழில்வாய்ப்புக்காக சென்றிருந்த 20 இலங்கையர்கள் டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான ஈ.கே – 648 விமானத்தில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேபோன்று நேற்றுக் காலை 3.50 மணியளவில், ஜப்பான் நரிட்டோவிலிருந்து 16 இலங் கையர்கள், இலங்கை ஏயர் லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான யுஎல் – 455 என்ற விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டுக்கு வருகை தந்த அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவுக்கு மத்தியில்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இந்த நம்பிக்கைக்கு தரும் ஊக்கமானது தாம் நேசிப்பவரை இழந்தவர்களுக்கு அல்லது அவர்களின் வேலைவாய்ப்பு அல்லது இரண்டையும் இழந்தவர்களுக்கு நம்பத்தகாததாகத் தோன்றலாம்.

உண்மையில் தற்போதைய தொற்று நோயால் ஏற்படும் சோகமான சூழ்நிலைகளில் அன்றாட வாழ்க்கை, பொருளாதாரம், சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி மற்றும் மத நடைமுறைகள் என்பன சிதறடிக்கப்படுகின்றன. ஆயினும் இந்தத் தெய்வீக உறுதிப்பாட்டின் மீதான துல்லியமான நம்பிக்கையே, நம்பிக்கையுடன் நமது சமூகங்களின் மத்தியில் நம்பிக்கையை மீண்டும் எழுப்புவதற்கான உழைப்பிற்கும் தூண்டுகிறது.

இந்தத் தொற்றுநோய் உண்மையில் நம் சிந்தனை மற்றும் வாழ்க்கை முறைகளில் பல சாதகமான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. உலகளவில் இது முன்னோடியில்லாத துன்பங்களையும் தடைகளையும் ஏற்படுத்தியுள்ளது. இவை வாழ்க்கையின் சாதாரண போக்கை மாற்றியுள்ளன. துன்பத்தின் அனுபவங்களும் பரஸ்பர பொறுப்புணர்வும் நம் சமூகங்களை ஒற்றுமையிலும் அக்கறையிலும் ஒன்றிணைத்துள்ளன. துன்பம் மற்றும் ஏழைகளுக்கு இரக்கம் மற்றும் இரக்கச் செயல்களில் ஒன்றிணைத்துள்ளன.

ஒற்றுமையின் இந்த அறிகுறிகள் சகவாழ்வின் முக்கியத்துவத்தையும் பரஸ்பர உண்மையையும் அனைவரின் நலனுக்காகவும் நம்முடைய பொதுவான வீட்டின் நல்வாழ்வுக்காக ஒருவருக்கொருவர் நமக்குத் தேவைப்படுவதையும் இன்னும் ஆழமாகப் உணர்த்தியுள்ளன.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டது போல ஒற்றுமை என்பது ஒரு தொற்றுநோய்க்குப் பிந்தைய உலகத்தை நோக்கிச் செல்வதற்கான வழியாகும். ஒற்றுமை என்பது நமது தனிப்பட்ட மற்றும் சமூக நோய்களிலிருந்து குணமடைவதற்கான வழியாகும். ஒற்றுமை என்பது நெருக்கடியிலிருந்து மேம்பட வழியாகும் (02 செப்டம்பர் 2020).

நம்முடைய அந்தந்த மத மரபுகள், துன்பங்களில் கூட நேர்மறையான மற்றும் நம்பிக்கையான அணுகுமுறையில் இருக்க நமக்குக் கற்றுக் கொடுக்கின்றன. அந்த மத மரபுகள் மற்றும் போதனைகளின் அடிப்படையில் நம்முடைய பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் மனித குலத்தின் மேம்பாட்டிற்கான எங்கள் அர்ப்பணிப்பு கிறிஸ்தவர்களும் இந்துக்களும் நம் சமூகங்களின் இதயத்தில் நேர்மறை மற்றும் நம்பிக்கையின் கலாச்சாரத்தை கட்டியெழுப்ப நன் மனதுள்ள அனைத்து மக்களுடனும் இந்த கடினமான நாள்களில் மட்டுமல்ல, வர இருக்கும் எதிர்காலத்திலும் ஒன்றுபடுவோம்.

உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான தீபாவளி

## தேசிய நல்லிணக்கம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளமான தேசமும், நம்பிக்கையான எதிர்காலமும் உறுதிப்படுத்தப்படாதவரை தமிழ் மக்கள் எதிர் கொண்ட பிரச்சினைகள் தீராப் பிரச்சினைகளாகவே இருக்கப்போகின்றன. அத்தகைய நிலையே தொடரவேண்டும் என தமது சுயநலன்களை முன்னிருத்தும் அரசியல் வாதிகள் விரும்புகின்றனர்.

ஆனால் எமது ஓய்வின்றிய உழைப்பும் கடினமான முயற்சிகளும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கும், அன்றாடப் பிரச்சினைகளுக்கும், அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகளுக்கும் தேசிய நல்லிணக்கத்தின் வழியில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறை ஊடாக பொருத்தமான தீர்வுகளைப் பொற்றுக்கொடுப்பதே ஆகும்.

பண்டிகைக் காலங்களில் தமிழ் மக்களின் வாழ்வில் ஒளிவீச வேண்டும் என அவரவர் அறிக்கைகள் விடுவதால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்து விடாது. மாறாக அத்தீர்வுகளை அடைந்து கொள்வதற்கான விருப்பமும், அர்ப்பணிப்பும், உழைப்பும் இருக்க வேண்டும்.

அந்த உறுதியைச் சுமந்தவாறே கரடு முரடான பாதையாயினும், அரசியலில் நாம் எதிர்பார்த்த பலம் கிடைக்காத போதும், கிடைத்த அதிகாரத்தை மக்கள் நலனை முன்நிறுத்தி உழைக்க வேண்டுமென உறுதியேற்றுள்ளோம்.

எமது உழைப்பும், அர்ப்பணிப்பும் தமிழ் மக்களைச் சூழ்ந்துள்ள இருளை விலக்கி நிரந்தர ஒளியை கொடுக்கும் என்று நம்புகிறோம். – என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்









காலைக்கதிர் Kalaikkathir

# தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

## சமூக இடைவெளியைப் புறந்தள்ளி யாழ். நகரில் அலைமோதிய மக்கள்



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

கொரோனாத் தடுப்பு சமூக இடைவெளியைப் பேணாது தீபாவளிப் பண்டிகைக் கொள்வனவுக்காக யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் பொதுமக்கள் இன்று அலைமோதினர்.

வழமையாக தீபாவளி பண்டிகையின் முதல் நாள் சனக்கூட்டத்தால் யாழ். நகரம் நிரம்பி வழியும். எனினும், இம்முறை கொரோனா அச்சுறுத்தலால் அனைவரும் வீடுகளில் இருந்தவாறு தீபாவளியைக் கொண்டாடுமாறு சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் இந்து மதத் தலைவர்களும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அதனால் யாழ். நகரம் இன்று மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், புடவைக் கடைகள் மற்றும் ஏனைய கடைகளில் பொதுமக்களின் வழமை போன்று அலை மோதினர்.

இதேவேளை, கொரோனாத் தொற்று ஆபத்தால் யாழ். நகரில் அங்காடி வியாபாரம் யாழ். மாநகர மேயரினால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கு குறித்து இன்று முடிவு

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட உத்தரவை நீக்குவதா அல்லது தொடர்வதா என்பது குறித்து இன்று சனிக்கிழமை தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா இதனை இன்று தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் ஊரடங்கு உத்தரவை மீண்டும் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்துவது தொடர்பான தீர்மானம் இது வரை எடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.


















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2020 இல் வெளியிடப்பெற்றது.


இனிய தீபத் திருநாள்
நல் வாழ்த்துக்கள்


அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
இனிய தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
நவநாகரிக உலகின்
ஆடை சாம்ராச்சியம்
புகழ் புடவையகம்
Puhal Textiles
இல - 129, பிரதான வீதி, பருத்தித்துறை
T.P - 077 9850669


அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
இனிய தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்
northern
PC PARK
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகரமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124
077 336 6443
075 555 7327
071 777 2377
021 567 5566
021 222 9581
021 222 2050
021 222 0388
10, Muddaskadai Junction
Stanley Road, Jaffna
Hot Line - 077 777 1545
info@pcpark.co
www.pcpark.co


NFlash Super Detergent
எமது வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
HI CLEAN
Northern Products
கொரோனாவில் இருந்து
நம்மை பாதுகாத்திட...!
ஏகவிநியோகஸ்தர்
சாய் க்ளீனிங் அன்ட் கிட்ஸ் வேல்ட்
பிரதான வீதி, பருத்தித்துறை
077 296 9830
607A, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
077 844 4951


எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்
சொர்க்கம்
திருமண சேவை
எம்மிடம் எல்லா சமூகத்தினருக்கு
மான ஜாதக குறிப்புகளும்,
உள்நாட்டு, வெளிநாட்டு அரச
மற்றும் தனியார்துறை
ஊழியர்களுக்குமான
குறிப்புகளும் உண்டு.
www.sorkham.com
102/A பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு - 001416661855, 077 650 5097,
076 236 4188, 021 222 1515


கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
இயற்கைக்கான தருணம்
வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 1-30, 2020
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
விளம்பர அனுசரணை:-
காலைக்கதிர்
Kalaikkathir